Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 117

யாழ்ப்பாணம் வைகாசி 24 ரபி; ஆகிர் 23 செவ்வாய்க்கிழமை (6-6-72)

பிரகாசமான - நீகரற்ற
வெண்மை தருவது!




எங்கும் கிடைக்கும்

விசுவாசப்பிரமாணம் எடுப்பதற்கு

# தமிழர் கூட்டணி எம்பிகளுக்கு ஆகஸ்ட் 22 வரை காலக்கெடு

## தவறினுல் பதவியை இழப்பர்

கொழும்பு, திங்கள் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் எம். பிக்கள் தேசிய அரசுப் பேரவையில் விசுவாசப் பிரமாணம் செய்யும் திகதியாக ஆகஸ்ட் 22-ம் தேதி குறிக்கப்பட்டுள்ளது.

இந்த எம். பிக்கள் தேசிய அரசுப் பேரவைக்கு வந்து விசுவாசப் பிரமாணம் எடுக்க வேண்டும். இத்தேதிக்குள் விசுவாசப் பிரமாணம் செய்யத் தவறினால் அவர்கள் தங்கள் பதவியை இழக்க நேரிடும்.

பழைய; புதிய அரசியல் திட்டங்களின்படி ஒரு எம். பி. லீவு எடுக்காமல் தொடர்ந்து 3 மாதங்களுக்கு ஆட்சி மன்றத்துக்கு செல்லாது இருந்தால் அவரது பதவி பறிபோகும்.

கொழும்பில் தமிழரசுக் கட்சியின் எம் பிக்களை அவர்கள் இன்று தேசிய அரசுப் பேரவைக்கு செல்வார்களா எனக் கேட்டபோது அவர்கள் அரசுப் பேரவைக்குச் செல்வது பற்றி தமிழர் கூட்டணியே முடிவு செய்யும் எனத் தெரிவித்தனர்.

[சி, பி, ஏ]

தேசிய அரசுப் பேரவை இன்று கூடுகிறது

## சிம்மாசனப் பிரசங்கம் இனி இல்லை

கொழும்பு, செவ்

இன்று கூடும் தேசிய அரசுப் பேரவையில் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா அரசின் கொள்கை அறிக்கை ஒன்றை வெளியிடுவார்.

ஆட்சிமன்றம் ஒவ்வொரு வருஷமும் ஆரம்பிக்கும் போது சிம்மாசனப் பிரசங்கத்தை சபாநாயகர் நிகழ்த்துவது வழக்கம்.

இந்தச் சிம்மாசனப் பிரசங்கத்துக்குப் பதிலாகவே தேசிய அரசுப் பேரவையில் பிரதமர் கொள்கை அறிக்கையை வெளியிடுவார்.

[சி, பி, ஏ]

## நாளை பெருமாள் கோவிலில்

யாழ்ப்பாணம், செவ்.

நாளை யாழ். ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலில் ஏகாதசி உற்சவம் நடைபெறவிருக்கிறது. மாலை 6 மணிக்கு ஆயர்பாடி ஆழ்வார் திரு. வே. தம்பிப்பிள்ளை வாகனம் "ஸ்ரீபாத ஆழ்வாரின் பக்தியின் பெருமையும் ஸ்ரீராமன் அனுக்கிரகித்ததும்" என்ற பொருளில் உபந்நியாசம் நிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து ஏகாதசி உற்சவம் நடக்கும்.

## வங்கி அருகில் சம்பவம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள வங்கியொன்றின் அருகில் ஏற்பட்ட சம்பவத்தில் வடபகுதி எம். பி. ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

வாலிபர் ஒருவர் தம்மைப் பயமுறுத்தியதாக சம்பந்தப்பட்ட எம். பி. பொலிசாரிடம் புகார் செய்ததைத் தொடர்ந்து அந்த வாலிபர் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், ஆனால் சம்பந்தப்பட்ட எம். பி. யே தம்மைத் தாக்கியதாக அந்த வாலிபர் புகார் கூறியதாகவும் அறியப்படுகிறது.

## இன்றைய கூட்டத்திலும் கலந்து கொள்ளார்?

கொழும்பு, செவ்.

ஆளும்கட்சி ஆட்சிமன்றக் குழுவும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிமன்றக்குழுவும் இன்று தேசிய அரசு சட்டசபை கூடுவதற்கு முன்பதாகவே கூடி அரசியல் நிலைமைகள் பற்றி ஆலோசனை நடத்தவிருக்கின்றன.

ஆளும்கட்சி ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதிலிருந்து கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கவுக்கு விதிக்கப்பட்டதடை உத்தரவு இன்னமும் அமுலிலிருக்கிறது.

அமைச்சர் திரு. கெனமனும் உதவி அமைச்சர் திரு. துடாவையும் கூட்டத்தில் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஏனைய மூன்று உறுப்பினர்கள் ஏற்கனவே ஆட்சிமன்றக்குழுவிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பது தெரிந்ததே.

குற்றவியல் நீதிக்கமிஷன் மசோதா மீது வாக்களிக்காமல் விட்டது குறித்து டாக்டர் விக்கிரமசிங்கா இன்னும் ஆட்சிமன்றக்குழுவுக்கு விளக்கம் அளிக்கவில்லை.

ஐ தே கட்சி எம் பிக்கள் இன்று தமது கட்சியின் பாராளுமன்றப் புதிய தலைவரைத் தெரிவுசெய்தாக வேண்டும். ஆனால் திரு ஜே ஆர் ஜெயவர்த்தனாவே ஐ தே கட்சித் தலைவராக இருப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

குருநாகல், திங்கள்

பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாலை 50 திகதி புங்குடுதீவில் மண்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றையும், 9ம் திகதி சாவகச்சேரியில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றையும் திறப்பதற்கு தீவுப்பகுதி காரியாதிகாரி திரு பி நடராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

டாக்ஸியில் வந்தவர்கள் கைவரிசை?

# நல்லூர் கி. ச. தலைவர் சுடப்பட்டார்!

## டாக்ஸி சாரதி நாவற்குழி மதகுக்கடியில் கிடந்தார்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் கிராமசபை தலைவர் பொ. குமாரகுலசிங்கம் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி பலத்த காயத்திற்குள்ளானார். இச்சம்பவம் சம்பந்தப்பட்ட டாக்ஸி ஒன்று செம்மணியில் ஓர்பகுதி எரிக்கப்பட்ட நிலையில் கிடப்பட்டிருந்தது. டாக்ஸி சாரதி பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

உதவி பொலிஸ் அதிபர் திரு. பேர்ரம் பெரேரா, இன்ஸ்பெக்டர் செல்லராசா, இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் இச்சம்பவம்பற்றி விசாரணை செய்து வருகின்றனர். இச்சம்பவம்பற்றி பொலிசாருக்கு புதிய தகவல்கள் கிடைத்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

[illegible] [illegible] 8 [illegible] கிராமத் தமது இல்லத்தின் முன்றில் [illegible]

படியில் கிராமசேவகரொருவருடன் கதைத்துக்கொண்டிருந்தபோது இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

இனந்தெரியாத மூவர் டாக்ஸியில் வந்து அவ்விடத்தில் நின்றதாகவும் அவர்களில் ஒருவர் சிரேஷ்டை புகைத்தபடி துப்பாக்கியால் அவரை சுட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

டாக்ஸியின் சொந்தக்காரர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப் படுகிறார்.

டாக்ஸி சாரதி

டாக்ஸியின் சாரதியைப் பொலிசார் தீவிரமாகத் தேடியதின்பின்னர் நாவற்குழியில் அவரைக் கண்டு பிடித்தனர். 5 சிறி இலக்கத்தைக் கொண்ட இந்த டாக்ஸியின் சாரதி ஒட்டுமடத்தைச் சேர்ந்தவர் என்றும் சோகநாதன் என்பது அவர் பெயர் என்றும் தெரிகின்றது.

பலத்த காயங்களுடன் நாவற்குழி மதகொன்றில் கிடந்த சாரதியைப் பொலிசார் ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர். அவரது நிலை திருப்திகரமாயில்லை என்று தெரிகின்றது.

## மரண அறிவித்தல்

ஆ. ச. கந்தையா

விளாவெளி, களபூமி, காரைநகர் விலைமதிப்பீட்டாளரும், கொமிஷனரும் முன்னைநாள் கிராமசபைத் தலைவரும் ஆகிய ஆ. ச. கந்தையா அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், காரைநகர் கிழக்கு முன்னாள் விதானையாரும், தற்போது கொமிஷனரும் உத்தரவுபெற்ற அடைவு பிடிப்பவருமாகிய க. சுப்பிரமணியத்தினதும், கொழும்பு நியாயதுரந்தரர் ச. க. பொன்னம்பலத்தின் அருமைத் தந்தையும், முத்தம்மாள் - இராஜேஸ்வரியின் மாமனாரும், வி. கணபதிப்பிள்ளை (யாழ்ப்பாணத் தபாற்கந்தோர் உதவிப் போஸ் மாஸ்டர்), புஷ்பராணி சி. ஜெகதீசன் (கண்டி நகரசபை பொறியியலாளர்), தேரம்பாள், சண்முகலிங்கம், சிவலிங்கம் இராசலிங்கம், அப்புலிங்கம், புஷ்பலீலா, புஷ்பவதி, கலாவதி, திலகவதி, சாந்தினி, வசந்தினி, பாலகுமார், ஜெயகௌரி, லவிதா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (6-6-72) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர்-கிழக்குத் தில்லையம்பலத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றாரும், நண்பரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

4236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் புரட்சி மங்கை அஞ்சலாடேவிஸ் விடுதலை!

வாஷிங்டன், ஜூன் 5

**அமெரிக்காவில் பிரபல கம்யூனிஸ்ட் ஊழியரான செல்வி அஞ்சலா டேவிஸ் கலிபோர்னியா நீதிமன்றம் ஒன்றினால் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.**

கொலைகள் செய்ததாகவும் சதித்திட்டம் தீட்டியதாகவும் ஆட்கடத்தல் செய்ததாகவும் செல்வி அஞ்சலா மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

ஐந்துவாரங்களாக அஞ்சலா மீதும் அவரது சகாக்கள் மீதுமான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டு வந்தன.

இன்று அதிகாலையில் தீர்ப்பு வெளியாகியது முழுதும் வெள்ளையர்களைக் கொண்ட ஜூரி சபையினர் அஞ்சலாவை சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் நிரபராதி எனத் தீர்ப்பளித்தனர்.

தீர்ப்பு வெளியானபோது பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த பொதுமக்கள் ஆரவாரம்செய்து அதனை வரவேற்றனர்.

அஞ்சலாமீதான குற்றச்சாட்டுகள் சந்தர்ப்பவசமானவையென்றும் இக்குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லையென்றும் ஜூரிசபையினர் கூறியிருக்கின்றனர்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றைத் தொடர்ந்து செல்வி அஞ்சலாவும் அவரது சகாக்களும் கைதுசெய்யப்பட்டுவந்தனர். இரண்டு மாதங்களின் பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளரான அஞ்சலா கைதுசெய்யப்பட்டார்.

அவர் கைதுசெய்யப்பட்டதையடுத்து அமெரிக்காவிலும் பல வெளிநாடுகளிலுள்ள நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவந்தன.

---

வங்கதேசத்தில்

## ரயில் விபத்து 50 பேர் பலி

டாக்கா, ஜூன் 5

வங்காள தேசத்தில் ஜெசூர் நகரில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 50 பேர் கொல்லப்பட்டும் 400 பேர் காயமடைந்துமுள்ளனர்.

விபத்து நடந்த இடத்துக்கு குல்னாவிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் உடனடியாக உதவிக்கு ரயில்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வங்காள தேசத்தைச் சேர்ந்த இரு அமைச்சர்கள் உடன் சென்று நிலைமையை ஆராய்ந்தார்கள்.

விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய விசேஷக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

---

## 'பரிபூரண ஆயுத குறைப்புக்கு வழி பிறக்கும்'

மாஸ்கோ, ஜூன் 5

மே மாதம் 26ந் திகதி மாஸ்கோவில் சோவியத் தலைவர் பிரெஷ்னேவும், அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனும் கைச்சாத்திட்ட கேந்திர ஆயுதங்களை வரையறுத்து கட்டுப்படுத்தும் உடன்படிக்கை இறுதியாக பரிபூரண ஆயுதக் குறைப்பு என்ற லட்சியத்தை நனவாக்கும் என்று உலகம் விரும்புகிறது.

ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கை குறித்து எழுதுகையில் மேற்கண்டவாறு சோவியத் ராணுவ விமர்சகர் எஸ் கொஸ்லேவ் கூறுகிறார்.

ஆயுதப்போட்டிக்குச் சிலப்பு விலக்கு ஏற்பட்டுள்ளது என்ற நம்பிக்கை வெளியாகியுள்ள இவ்விமர்சனம். கேந்திரஆயுத வரையறுப்பு கட்டுப்பாடு ஒப்பந்தம் 1969ம் ஆண்டு முதலாய் ஹெல்சிங்கியிலும் வியன்னாவிலும் தொடர்ச்சியாக நடந்து வந்த பேச்சுவார்த்தைகளுக்கு வெற்றி மகுடமிடுவதாக உள்ளது.

உலகம் பூராவிலுமுள்ள கோடானுகோடி மக்களின் மாஸ்கோ பேச்சுவார்த்தைகளை நம்பிக்கையுடன் அவதானித்து வந்தனர். இன்றைய சாதனை மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டு இறுதியாக முற்றான ஆயுதக் குறைப்பு ஏற்பட வேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

சோவியத் அரசாங்கத்தின் நிலையும் இதுவே. பரிபூரணமான ஆயுதப் பரிஹரணம் மானிட ஜாதியின் நலன்களுடன் இணக்கமும் உடன்பாடும் உடைய உன்னதலட்சியமாகும் என்று அவர் எழுதியுள்ளார்.

அவர் மேலும் கூறுவதாவது: இம்முயற்சிகளின் பிரதான பணி அணுவாயுதங்களும் மற்றும் நாசகார ஆயுதங்களும் முற்றாக தடுக்கப்படவேண்டும். இன்று குவிந்து கிடக்கும் மேற்படி ஆயுதங்கள் அழித்தொழிக்கப்படவேண்டும். அணுசக்தி சமாதானப்பணிக்கே அர்ப்பணிக்கப்படவேண்டும்.

இப் பிரச்னைக்குப் பரிகாரங்காண சோவியத் யூனியன் 1946ம் ஆண்டு பல்வகை? ஆலோசனைகளை முன்வைத்து வந்துள்ளது. சோஷலிஸ நாடுகளினதும் மற்றும் சமாதானம் விரும்பும் நாடுகளினதும் குன்றாத ஆதரவின் காரணமாகவும் சோவியத் யூனியன் தொடர்ச்சியான முயற்சியாலும் சமாதானத்தின் சக்திகளின் பிடி வலுத்து வளர்ந்து இக்கடினமான பாதையில் சற்று முன்னேற்றம் சாத்தியமாகியுள்ளது.

இதற்கு முன்னர் கைச்சாத்தான உடன்படிக்கைகள் சில துறைகளில் அணு ஆயுதப் பரிசோதனை தடுக்கும் உடன்படிக்கை அண்டவெளிக்குள்ளும் கடலுக்குள்ளும் மேலும் அணு ஆயுதங்களைச் செலுத்துவதை தடுக்கும் உடன்படிக்கை ஆகியன அணு ஆயுதப் போர் அபாயத்தை ஒரு குறிப்பிட்ட அளவிலேனும் குறைத்துள்ளது என்று அவர் மேலும் கூறுகிறார்.

---

## ரூபா 1000 அபராதம்

வல்வெட்டித்துறை, திங்கள்

பருத்தித்துறை வாசியான முருகுப்பிள்ளை சபாரத்தினம் என்பவர் தற்சமயம் பருத்தித்துறைத் துறைமுகத்தில் மாவு இறக்குமதிசெய்துகொள்ள நங்கூரம் இட்டிருந்த 'அதில்டிஸ் ஸைலஸ்' என்ற கப்பலுக்குள் சென்று சுமார் 3000 ரூபா பெறுமதியான ரேடியோ ஒலிபெருக்கி ரேப்றெக்கோடர் இணைக்கப்பட்ட கருவி ஒன்றை திருடியதாக பருத்தித்துறை வாசியான முருகுப்பிள்ளை சபாரத்தினம் என்பவரை பருத்தித்துறை உதவி சுங்கச்சேகரிப்பாளர் திரு. ஆனந்தசிங்கம் கைதுசெய்து யாழ்ப்பாணம் உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. செனரத்னவிடம் ஒப்படைத்தார். சுங்க சேகரிப்பாளர் சந்தேகநபருக்கு 1000 ரூபா அபராதம் விதித்தார்

---

இந்தியாவில் அப்போஸ்தலர்

## புனித தோமையர் 19-வது நூற்றாண்டு விழா

வேதீஸ்வரம், திங்கள்

இந்தியாவிற்கும் அயல்நாடுகளுக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பவந்த அப்போஸ்தலர் புனித தோமையாரின் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் சென்னை மயிலை கடற்கரையில் அமைந்திருக்கும் தீவுத்திடலிலுள்ள திறந்த வெளியரங்கிலும் சென். தோமஸ் உயர்நிலைப்பள்ளியிலும் சிறப்பாக நடைபெற்றன.

இத்தலைமேற்படிகொண்டாட்டங்களில் கலந்துகொண்டு தாயகம் திரும்பியுள்ள அடம்பன்பகுதி கட்டளைக் குருவானவர் வண. பிதா சவரிமுத்து ஹலஸ் ஜெயநேசன் தெரிவித்தார். அவர் பாரதத்தில் ஐந்துவாரகாலம் சுற்றுப் பிரயாணம் செய்து பல இடங்களையும் பார்வையிட்டார். கோவாவிலுள்ள பஞ்சிம் துறைமுகத்திலிருந்து நீராவிக் கலத்தில் இருபத்திரண்டு மணிநேரம் கடலில் பயணம் செய்து பம்பாய் சென்று சேர்ந்ததை மறக்கமுடியாத ஒரு காட்சியென்று கூறிய அவர் அப்போஸ்தலர் புனித தோமையார் கொண்டாட்டங்களைப் பற்றி மேலும் கூறியதாவது:-

பல மதங்களும் பாகுபாடின்றியும் நெருக்குதல்கள் இன்றியும் செழித்தோங்கி வளரும் இந்தியாவில் சகல மத மக்களும் பல்லாயிரக்கணக்கில் புனித தோமையார் பத்தொன்பதாம் நூற்றாண்டு வைபவத்தில் பங்குபற்றியமை ஆச்சரியமான தொன்றல்ல. மறுநாள் இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் அந்த அப்போஸ்தலரின் அதாவது நற்செய்தியைப் பரப்ப அனுப்பப்பட்டவர்கள் பணிகள் பரந்திருந்த போதிலும் சென்னையைச் சேர்ந்த மைலாப்பூரே கேந்திர நிலையமாக விளங்கியது. செ. தோமஸ் மலையும் மடங்களும் பள்ளிகளும் மருத்துவ மனைகளும் அவரது தொண்டை நினைப்பூட்டுகின்றன.

அவரது கொண்டாட்டங்களை முன்னிட்டுச் சிறப்பு மலரொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் பாரத இந்திய ஜனாதிபதி, பாரதப் பிரதமர் போன்ற முக்கியமான பலரின் வாழ்த்துச் செய்திகளும் ஏராளமான அறிஞர்களின் விஷயங்களும் இடம்பெற்றுள்ளன. கவியரங்கம், கருத்தரங்கம், சொற்பொழிவுகள், மதவைபவங்கள் கலைச்சார நிகழ்ச்சிகள் பலவே நடனம், ஒளிபக் காட்சி போன்றவை இடம்பெற்றன. நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் நடைபெற்றன.

---

## அ. இ. பெ. ஆ சங்க ஆரம்ப விழா

கொழும்பு, திங்கள்:

அடுத்த ஆகஸ்ட் மாதம் 27-ந் திகதி அகில இலங்கை பெற்றோர் ஆசிரியர் சங்க ஆரம்ப விழா நவரங்ஹல மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

இதனை கல்வி அமைச்சர் ஆரம்பித்துவைப்பார். இதில் இலங்கையின் சகல பாகங்களிலிருந்து 400 பெற்றோர்களும் 200 ஆசிரியர்களும் ஸ்தாபக அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

---

## தரம் உயர்த்த கோரிக்கை

கொடிகாமம் - திங்கள்

கொடிகாமம் உபதபால் கந்தோரை தரம்உயர்த்தி பெரியகந்தோராக்கும்படி கொடிகாமம் அபிவிருத்திச் சபையினர் தபால் அமைச்சரை மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இத்தபால்கந்தோர் இயங்கி வருவதாகவும் தென்மராட்சி கிழக்கு பகுதிக்கு மட்டுமன்றி வடமராட்சிப் பகுதிக்கும் இது ஒரு முக்கிய தபால் நிலையமாக இருந்து வருவதால் விரைவில் தரம் உயர்த்தும்படி அம்மகஜரில் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

---

## உருவப்பட திரைநீக்கம்

சுழிபுரம், திங்கள்

கூட்டுறவாளரும் சிறந்த சமூகசேவையாளருமாக விளங்கி மறைந்த அ. வீரசிங்கத்தின் உருவப்படத்தை வலி மேற்கு காரியாதிகாரி திரு. கே. நடராசா திரைநீக்கம் செய்துவைத்தார். சங்கானை தெற்கு மேற்கு வடலியடைப்பு ஐக்கிய நாணய சங்க 40-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தின்போதே மேற்படி நிகழ்ச்சி நடைபெற்றது

---

## பரிசளிப்புவிழா

வேலணை, திங்கள்

புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலைய விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நிலையத் தலைவர் திரு. செ. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது. வெற்றியீட்டிய வீரர்களுக்கும் கழகங்களுக்கும் சனசமூகநிலையங்களுக்கும் ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரி திரு. எஸ். சிவேந்திரன் பரிசில்களை வழங்கினார்.

---

காவிரி நீர்த்தகராறு

# தமிழ்நாடு தாக்கல்செய்த வழக்கு வாபசாகும்

சென்னை ஜூன். 5

காவிரிநீர்த்தகராறு சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை தமிழ்நாடு அரசு விலக்கிக் கொள்ள தீர்மானித்திருக்கின்றது.

தமிழ் நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சித் தலைவர்களோடும் கலந்து ஆலோசித்த பின்னர் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இதனை அறிவித்தார்.

காவிரி நீரைப் பங்கிடுவது சம்பந்தமாக மைசூர் அரசுக்கும் தமிழ் [illegible] கத் தீர்த்துக் கொள்ளப்படமையால் நடுவர் குழுவொன்றை நியமிக்கும்படி தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கோரிவந்தது. அதனுல் பயன் ஏதும் ஏற்படாததனால் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது.

கடந்த 29ம் திகதி மத்திய நீர்ப்பாசன அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் இந்தத் தகராற்றில் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமை அமைச்சர்களைக் கூட்டி சமரச மாநாடு ஒன்றை நடத்தினர். மைசூர், கேரளம், தமிழ்நாடு ஆகியமூன்று மாநில அமைச்சர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

காவிரிநீர்த்தகராறை சுமுகமாகத்தீர்த்துவைக்கமத்திய அரசுமுன்வந்திருப்பதால் இத்தகராறு சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்தவழக்கை விலக்கிக் கொள்வது பற்றி தமிழ்நாடு முதல்வர் சகல கட்சித் தலைவர்களோடும் ஆலோசனை நடத்தினர். இதன் பின்னர் வழக்கை வாபஸ்பெற்றுக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ். யாழ். மாவட்ட கல்லூரிகளிடையே நடைபெற்று வரும் 2-ம், 3-ம் பிரிவுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில், யாழ். மத்திய கல்லூரியும், சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

### சென். பற்றிக்ஸ் வெற்றி

மேற்படி இரு கல்லூரிகளின் 2-ம் பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி 6 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### யாழ். மத்திய கல்லூரி வெற்றி

3-ம் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில், யாழ் மத்திய கல்லூரி 10 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

---

சனசமூகநிலைய

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ். யாழ். மாவட்ட காரியாதிகாரிப் பிரிவிலுள்ள சனசமூகநிலையங்களிடையே நடாத்தப்படும் வருடாந்த உதைபந்தாட்ட, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இம்மாத முற்பகுதியில் யாழ். நகரில் நடைபெறவுள்ளது. (தே நி)

## காணிக்கச்சேரி

ஒட்டுசுட்டான், திங்கள். ஒட்டுசுட்டான் சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு குடியிருப்பதற்கென தலா ஒவ்வொரு ஏக்கர் நிலம் கொடுப்பதற்காக ஊழியர்களிடமிருந்து காணியாக அரசாங்க அதிபர் விண்ணப்பம் கோரியுள்ளார். இக்காணிக்கான விண்ணப்பங்கள் 15-6-72-க்கு இடையில் அனுப்பப்படல் வேண்டும். 20-6-72-ல் இதற்கான காணிக் கச்சேரி காலையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் நடைபெறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

6-6—72 செவ்வாய்

(செய்திகள், காலை 6-30 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி. 6-20 சைவ நற்சிந்தனை கே. ஸ்ரீ கே. ஸ்ரீ சுப்பிரமணியம் 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 6-40 அறிவிப்புகள் 6-50 திரைப்பாடல், 7-15 கான மஞ்சரி 7-30 மாகாணச் செய்திகள், 7-35 குரல் வகை 8-00 இசைவேள்வி கே. நடராஜா ச. சண்முகராஜன் 8-15 இஸ்லாமிய கீதம்.

மாலை 6-10 அறிவிப்பு 6-15 அகல் விளக்கு நடத்துபவர் சர்மா அண்ணா 6-30 இன்னிசை ஆர். வி. செல்வராசா. 7-00 தமிழ் மூலம் சிங்களம் 7-15 கமமும் புலமும், கைத்தொழிற்றிணைக்களத் தயாரிப்பினர் அளிக்கும் நிகழ்ச்சி 7-30 உலகச் செய்திகள், 7-35 வாத்தியக் கோஷ்டி 7-45 பேச்சு 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-10 அறிவிப்புகள் 9-30 கலைக்கோலம், நடத்துபவர் சில்லையூர் செல்வராஜன் 10-00 நேயர் விருப்பம்.

---

## சமய குரவர் குருபூசை

ஊர்காவற்றுறை, திங். சரவணை, சைவ இளைஞர் சங்கத்தினர் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைத் தினங்களையும் அனுஷ்டிப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

சரவணை - 'தேவபுரம்' ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் கடந்த சில ஆண்டுகளாக சமய குரவர் நால்வரினதும் குருபூசைத் தினங்களை இச்சங்கம் நடாத்திவருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செவ். புங்குடுதீவு - மேற்கு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி வருடாந்த உற்சவம் இம்மாதம் 10 ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 18-ம் திகதி ரதோற்சவமும், 19-ம் திகதி தீர்த்தோற்சவமும், நடைபெறவுள்ளன.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 24-ந் திகதி [6-6-72]

மேஷம்- இன்று அதிகம் பொருளும் பெருகும் ஊக்கமூட்டும் கடிதம் ஒன்று கிடைக்கலாம்

ரிஷபம்- அவசர முடிவால் அனேகருடன் குறைகள் விரயமாகும் பணம் குன்றலாம் உடல்நலத்தை பேணிக்கொள்ளவும்.

மிதுனம்- நினைத்த காரியங்கள் தடையின்றி நடைபெறும். தாய்வழிப்பெருமையுண்டு. வளர்ச்சிகரமான தினம்.

கடகம்- சாந்தப்பார்வை வசீகரிக்கும்பேச்சு கன்னியரி உறவால் காதலுமுண்டு

சிம்மம்- ஆசிரியர்க்கு செல்வாக்குக்கு இடமுண்டு. ஆசிரம் எண்ணங்கள் வாகன சொந்தக்காரர்களுக்கு அதிக லாபமுண்டு.

கன்னி- இல்லத்தின்சாயல் குடும்பத்தில் உறவுமுண்டு புத்திரர் மதிப்பு உயரும் சுபதினம்.

துலாம்- பொறுப்பேற்றமை பிசுபோடவு. பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. பொறுமைநன்று.

விருச்சிகம்- வாழ்க்கையில் இன்று மணம் கமழும் காதலிக்க கன்னியமான தினம்.

தனுசு- வியாபாரத்தில் அதிக முதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும் நண்பர்களும் தொல்லைதருவர்.

மகரம்- அரசியல் வாதிகளுக்கு புதிய ஆர்வம். புண்ணிய ஸ்தல யாத்திரைக்கு இடமுண்டு.

கும்பம்- அதிகாரிகளின் ஆதரவுக்கு இடமுண்டு. கவனிக்காவிட்டால் இழப்படைவீர் செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

மீனம்- கஷ்டங்கள் நிவர்த்தியாகும் வீட்டில் சுபகருமத்திற்கு இடமுண்டு. திருப்தியான தினம்.

திருமலை க. வேலுப்பிள்ளை
சோதிடகலாநிதி

## இடமாற்றம்

சுழிபுரம், திங்கள். கோப்பாய் பட்டின சபை வருமானவரி மேற்பார்வை அதிகாரியாக கடமையாற்றி வரும் திரு. எஸ். சரவணமுத்து ஜூலை மாதம் முதல் மூதூர் கிண்ணியா பட்டின சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

ஊர்காவற்றுறை, திங். காரைநகர் தம்போலை அமெரிக்கமிஷன் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர் திரு. வடிவேல் முருகன் காரைநகர் - தோப்புக்காடு மறைஞானசம்பந்தவித்தியாசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## தாலிக்கொடி அபகரித்த வழக்கு

பருத்தித்துறை- திங்கள் ஒருபெண் தனியே இருக்கையில் அவ்வீட்டில் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும் 3375ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அபகரித்ததாகவும் அதனை விற்றதாகவும் மார்க்கண்டு என்பவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி திரு ஜே. ஜி. ஆசீர்வாதம் சந்தேகநபரை 1500ரூபா பிணையில் செல்ல அனுமதித்து [illegible] தார்.

வேரற்கேணி

## கந்தசாமிகோயில் மீண்டும் கொடி ஏறுகிறது!

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக கொடியேற்றம் திருவிழா போன்ற வைபவங்கள் எதுவுமின்றி வரண்டு கிடந்த வேரற்கேணி கந்தசாமி கோவிலை பண்டிதர் செ. சிவசிவகம் அவர்களின் தலைமையிலான பரிபாலனசபை புதுப்பித்துக் கட்டி முடித்துள்ளது.

எமது கிராமத்திற்கு எழிலூட்டுவதாய் மத்தியில் மக்கள் எல்லோருக்கும் பெருமையளிப்பதாய் அமைந்துள்ள இந்தக் கோவிலுள் இருந்தருளும் கந்தனுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். இன்றைய பிரதிஷ்டாபனத்தை சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடாத்தி வைப்பார்.

இருபத்தைந்தாண்டுகளாக இருளடைந்து கிடந்த தென்மட்டுவிலார் இன்று ஒளி பெறுகின்றது.

கோவிலும் குளமும் நாட்டிற்கு அழகு தருபவை. தேவார தோத்திரமும், திருவிழாவும் மனித உள்ளத்திற்கு அமைதியைத் தருபவை. கோவில் கலைத் தலைத்தால், ஆறுகாலப் பூசை, அபிஷேகம், ஆராதனைகளால் உயரவேண்டும். கோவில் உயர்ந்தால்தான் குடியுயரும்.

இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர், இக்கோவிலில் நடைபெறும் திருவிழாக்கள் கண்கொள்ளாக் காட்சிகளாயிருக்கும். கொடியேற்றத்தைத் தொடர்ந்து 10 நாட்கள் பகலும் இரவும் கோலாகலமான திருவிழாக்கள் நடைபெறும். கோவிலைச்சுற்றி இயற்கையாகவே அமைந்திருக்கும் மருதம், வேண்டல், மகிழம், தென்னை ஆகிய மரங்கள் அழகிற்கு அழகூட்டும். அந்தக் காட்சிகளை மீண்டும் காணப்போகிறோம்.

—எஸ். பி. எஸ்.

## தீர்மானம்

ஊர்காவற்றுறை, திங். ஊர்காவற்றுறை பட்டின சபையின் எல்லை விஸ்தரிப்பு நடைபெறும்போது கரம்பொன் கிராமசேவகர் பிரிவுகள் முழுவதையும் பட்டினசபையுடன் சேர்க்கவேண்டும் எனவும் கரம்பொன் கிராமத்தின் ஒருபகுதியைப் பட்டின சபையுடன் இணைப்பதை எதிர்ப்பது எனவும் நாரந்தனைக் கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தலைவர் திரு சண்முகலிங்கம் தலைமையில் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது.

## அவதானிக்கும் பகுதி

கொழும்பு, திங்கள். தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு செ. குமாரசூரியர் தொலைபேசியில் அநாவசியமான பேச்சுக்கள் மணிக்கணக்காகத் தொடர்வதை நிறுத்துமுகமாக அவதானித்தல் பகுதி ஒன்றை நியமித்துள்ளார். இப்பகுதி ஒவ்வொருமத்திய தொலைபேசித் தொடர்பு விசாரணையிலிருந்து 50 யார் தூரத்திலமைக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையினால் தொலைபேசியில் தாமதம் ஏற்படாமல் பொதுமக்கள் பாவிக்க முடியும்என அமைச்சு கருத்துத் தெரிவித்துள்ளது இனிமேல் இருபெண் உதவி மேற்பார்வையாளர்கள இதுபற்றி நிமிடத்துக்கு நிமிடம் அவதானித்து அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், திங்கள். காரைநகர் கடற்படை வீரர்களுக்கும் யாழ்ப்பாணம் பகிரங்க வேலைப் பகுதி வீரர்களுக்குமிடையே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. போட்டியை பெருந்திரளான ரசிகர்கள் கண்டு களித்தனர்

## தொலைபேசிச் சேவை

பருத்தித்துறை. திங்கள். பருத்தித்துறை மருதடி உபதபாற் கந்தோருக்கு தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தினத்தன்று நடைபெற்ற வைபவத்துக்கு யாழ் டிவிஷன் தபால்கப்பின்டென்ட் தலைமைதாங்கினர்.

★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை - மர ஸ்குறு ஆணிகளை
நீங்கள் வாங்குவதனால் ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு. கொழும்பு-12
தொலைபேசி: 33143-4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 580

"த ஒயிட் கிளப்"
43; ஏ. பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்
உங்கள் எல்லோருக்கும்
உளம் கனிந்த அழைப்பு
தினசரி பி.ப. 6-30 மணி தொடக்கம் 8-30 மணி வரை
மாலை நேரத்தை மகிழ்ச்சியுடன் கழித்து பல பரிசுகளை அடைய
இதுவே ஓர் அரிய சந்தர்ப்பம்
ரூபா 2,500
ஸ்னோபோல் பரிசுகள்!!!
அத்துடன் இன்னும் பெறுமதி வாய்ந்த அநேக தொம்போலா பரிசுகள் வழங்கப்படும்
[1] புதிய ரலி சயிக்கிள்......44, இலக்கங்களில்
[2] புதிய ஹம்பர் சயிக்கிள்......43, இலக்கங்களில்
[3] புதிய றலி சயிக்கிள்......42, இலக்கங்களில்
இத்துடன்
ரூபா 50/- ரூபா 100/-
அடங்கிய ஸ்னோபோல்
இறுதிவரை கொடுக்கப்படும்
விளையாட்டில் பங்குபற்றுபவர்களுக்கு
தினமும் ஓர் இலவசச்சீட்டு
வழங்கப்படும்
'புதிய அங்கத்தவர்கள் பதிவுசெய்யப்படும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், ஆங்கில மொழிகளில் வழக்கு நடத்த முடிவு

மாவிட்டபுரம், திங்கள் மல்லாகம் நீதிமன்ற வழக்கறிஞர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் விரும்பிய மொழியில் வழக்குகளை நடத்துவதென முடிவு செய்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்ற வழக்கறிஞர்கள் நேற்றுக் காலை நீதிமன்றம் கூடமுன் நீதிமன்றத்திலகூடி மொழிப் பிரச்னைபற்றிஆராய்ந்தனர்.

முன்னாள் செனட்டரும் வழக்கறிஞருமான திரு. க. நடராசா தமிழில்தான் வழக்குகளை நடத்தவேண்டும் என எடுத்துக்கூறினார். மற்றும் சில வழக்கறிஞர்கள் இதுகாலம் வரை நடைபெற்றதுபோல ஆங்கிலத்திலேயே நடத்தப்படவேண்டும் என்று கூறினார்கள்.

இறுதியில் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ வழக்கறிஞர்கள் வழக்கை நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

மல்லாகம் வழக்கறிஞர் சங்க செயலாளர். வழக்கறிஞர் ஆர் ஜே செல்வரத்தினம் இதுபற்றி தெரிவிக்கையில் இச்சங்கத்தில் உள்ள 21 அங்கத்தவர்களில் 11 பேர் இன்று நடந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். மற்றவர்கள் பெரும்பாலும் சிவில் வழக்கறிஞர்கள் தான். இன்று கலந்துகொண்ட வழக்கறிஞர்களில் பெரும்பான்மையானோர் ஆங்கிலத்திலதான் வழக்கு நடத்துவதென முடிவுசெய்துள்ளனர். இவ பேரைத்தவிர ஏனையோர் ஆங்கிலத்திலேயே வழக்கை நடத்துவர்" என்றார்.

முன்னாள் செனட்டர் க. நடராசா தெரிவிக்கையில் நீதிமன்ற மொழி விடயத்தில் இன்று பல சிக்கல்கள் உண்டு. இவற்றை வருங்காலத்தில் தீர்த்துவிடலாம். இன்று கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிடாமல் தமிழிலேயே வழக்காடவேண்டும்' என்றார்.

......

## உற்சவம்

ஒட்டுசுட்டான், திங். ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரன் ஆலயத்தின் கொடியேற்றம் 11-6-72 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்று தொடக்கம் பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறும்.

## படித்த வாலிபர்களுக்கு காணி

ஒட்டுசுட்டான், திங். முத்தையன்கட்டு திட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு காணிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை வவுனியா அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

காணிகளுக்கு விண்ணப்பம் செய்வோர் 24-6-72க்கு முன்னர் தம்மது விண்ணப்பங்களை அரசாங்க அதிபர், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். மேற்படி காணிகளுக்கான காணிக்கச்சேரிகள் அடுத்தமாதம் 6ம், 7ம், 11ம் 13ம் 14ம் திகதிகளில் ஒட்டுசுட்டான் திட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

## முதலை வாயிலிருந்து குழந்தையை தாய் மீட்டார்

புத்தளம், திங்கள் 33 வயதும் பெண் மணி ஒருவர் முதலை வாயிலிருந்த தமது பிள்ளையைப் போராடி மீட்டார்.

புத்தளம்- மனுவங்காமா காலனியைச் சேர்ந்த எச். ஏ பண்டுவதி என்ற பெண்மணி தெதுருஓயா ஆற்றில் தனது எட்டுவயது மகனுடன் குளித்துக் கொண்டிருந்தபோது முதலையொன்று அப் பிள்ளையை வாயிலே கவ்விக்கொண்டு சென்றது. இதைக்கண்டபண்டுவதி மிக சிரமப்பட்டு முதலைவாயிலிருந்து பிள்ளையை மீட்டார். குழந்தை உடனடியாக புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். குழந்தையின் காலிலிருந்து சதையை முதலை பிய்த்தெடுத்து விட்டது.

......

சுழிபுரம், திங்கள் கன்னிவிளாங்குளம்முத்துமாரி அம்மன் வருடாந்த பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். கதிர்காமம் பாதயாத்திரை செய்வோர் கோஷ்டியினர் விசேஷமாக அங்கு தரிசனம் செய்தனர். அம்மனுக்கு விசேஷ அபிஷேக பூசை ஆராதனைகள் நடைபெற்ற பின்னர் அர்ச்சனைகள் நடைபெற்றன

......

## இவர்களுக்கு காலக்கெடு

குருநகர் திங்கள் அரசாங்க நிருவாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 92ம் 94ம் இலக்கங்கள் கொண்ட சுற்று நிருபத்தின்படி இலங்கைக் குடியரசின் சேவையாற்றுவதற்கு சகல அரசாங்க ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டுமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வி. அரசேகரா சுற்று நிருபம் ஒன்றை யாழ் மாவட்டத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் காரியாதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார்.

பதவி உத்தியோகத்தர் தரத்திற்குரிய அரச உத்தியோகத்தர்கள் 10ம் திகதிக்கு முன்னரும் ஏனைய தரங்களைச்சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் 30ம் திகதிக்கு முன்னரும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டுமெனவும் இத்திகதிக்குள் சத்தியப்பிரமாணம் செய்யத்தவறுபவர்கள் அத்திகதியிலிருந்து சேவையிலிருந்து விலக வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தகாத முறையில் ராணுவ வீரர்கள் நடந்தார்களாம்

## பொலிஸில் பெண் புகார்

யாழ்ப்பாணம்; செவ். ராணுவ வீரர்கள் மூவர் திடீரென வீட்டுக்குள் புகுந்து தன்னந்தனியளாக இருந்த திருமணமான பெண்ணுடன் தகாத முறையில் நடந்துகொண்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 7மணிக்கு காங்கேசன்துறையில் இச்சம்பவம் நடந்ததாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமாலினி ஜெயசேன என்ற பெண்மீதே இப்படி பலாத்காரம் பிரயோகித்தார்களாம்.

காங்கேசன்துறை பொலிஸில் இப்பெண்மணி புகார் செய்ததையடுத்து காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் விஜயேந்திரா இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் ஆகியோர் விசாரணை செய்து வருகின்றனர்.

பலாலி ராணுவ முகாமைச்சேர்ந்த ராணுவ வீரர்கள் மூவரே இப்படி நடந்து கொண்டார்களாம்.

இன்று அடையாள அணிவகுப்பு நடைபெறும்.

# சீமெந்து மோசடி வழக்கில் எதிரிகள்மூவரும் விடுதலை

மாவிட்டபுரம், திங்கள் சீமெந்து மோசடி வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மூன்று எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி. மாணிக்கம், இ. சிவசுப்பிரமணியம், எஸ். வீரசிங்கம் ஆகியோர் மீது மானிப்பாயைச் சேர்ந்த கபீர்முகமதுக்கு சொந்தமான 175 பை சீமெந்தை மோசடிசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி ஐ. சிவானந்தன் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் சாட்சிகள் முரண்பட்டதால் நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கில் 1-ம் எதிரிக்காக புரக்டர் சிவசிறீதரனும், 2-ம் எதிரிக்காக புரக்டர் ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜரானார்கள். வழக்காளிதரப்பில் கி. தம்பிரத்தினமும் எஸ். முத்துக்கிருஷ்ணனும் ஆஜரானார்கள்.


# கல்வி போதனை வகுப்புகள்

க. பொ. த. [உயர்தரம்]:- கணக்குப் பதிவியல், வர்த்தகம், பொருளாதாரம், கணிதம், விஞ்ஞான பாடங்கள்.

க. பொ. த. [சாதாரணம்]: கணித, விஞ்ஞான பாடங்கள், கணக்குப் பதிவியல், வர்த்தகம், பொருளாதாரம், ஆங்கிலம், சிங்களம்.

அரசாங்க ஊழியருக்கான சிங்கள வகுப்புகள்:
கிழமை நாட்களில்: பி. ப. 4-00 மணி தொடக்கம் இரவு 8-00 மணிவரை சனி. ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8-00 மணி தொடக்கம் இரவு 8-00 மணி வரை.

## இறவுண் போதனை நிலையம்

இல. 16, கண்டிவீதி. சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்.


# தமிழர் கூட்டணியினர் மன்னார் செல்கிறார்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய் தமிழர் கூட்டணியினர் மட்டக்களப்பு பகுதியில் பல வேறு இடங்களுக்கும் சென்று மக்கள் கருத்தை நேரில் அறிந்துகொண்டார்கள் சிலஇடங்களில் கூட்டங்கள் நடாத்தி தற்போதுள்ள நிலைமைபற்றி விளக்கிக்கூறினார்கள்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. வி. தர்மலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் மற்றும் கூட்டணிப்பிரமுகர்கள் மட்டக்களப்பிற்கு சென்றிருந்தார்கள்.

தமிழர் கூட்டணி எம். பிக்கள், விசுவாசப் பிரமாணம் எடுப்பதா, அல்லது பதவியை ராஜினாமா செய்வதா? என்பது பற்றி மக்கள் கருத்தை கூட்டணியினர் நேரில் அறிந்துகொண்டனர்

நாளை தமிழர் கூட்டணியினர் மன்னாருக்குச்செல்கின்றனர். மன்னாரில் 3 தினங்கள் தங்கி மக்களின் கருத்தை அறிந்துகொள்வார்கள். இம்மாதம் 11-ம் தேதி வவுனியாவிற்கு செல்வார்கள் 18-ம்தேதி திருமலைக்குச் செல்லத்திட்டமிட்டுள்ளனர்.

20-ம் தேதி முதல் கூட்டணியினர். யாழ். மாவட்டத்தில்பல்வேறுஇடங்களுக்கும் சென்று மக்கள் கருத்தை அறிவார்கள்.

இம்மாதம் 25-ம்தேதி நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணிநடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் தமிழ் மக்கள் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டு பதவிகளை ராஜினாமா செய்வதா? இல்லையா என்று இறுதி முடிவு எடுக்கப்படும் இக்கூட்டத்தில் அறப்போராட்டத்திட்டங்கள் பற்றி ஆலோசனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படவிருக்கிறது.

அன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நடவடிக்கைக்குழு முடிவுகள் வெளியிடப்படும்.

# ‘எதிரியும் இறந்தவரும் இழுபறிப்பட்டனர்’

யாழ்ப்பாண, செவ். நான் ஒழுங்கையில் நிற்க எதிரியும் இறந்தவரும் பொல்லைப்பிடித்து இழுபறிப்பட்டுக்கொண்டிருந்தனர். தான் ஓடிப்போய் இரண்டு பேருக்கும் அடித்துவிட்டு அவர்களை விலக்குப்பிடித்துவிட்டேன். அவர்கள் வைத்திருந்த பொல்லை எடுத்துக் கொண்டேன்.

மயிலிட்டிக் கொலைவழக்கில் சாட்சியமளித்த முருகன் சரவணமுத்து மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடமாகாண அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜெயபத்திரான முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் 1971-ம் ஆண்டு மார்ச் 19ம் தேதி மயிலிட்டியில் இளையவன் சிவனடியை ஆள்வான் நடேசு கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாட்சி மேலும்தெரிவித்ததாவது: சிவனடி சைக்கிளொட்டுப் புட்டன் சயிக்கிளில் சென்றார் சுமார் ஒன்றரை மைல் தூரம் சீனுக்கு போக வேண்டும். நான் தகப்பன் இளையவனுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். வடக்குப் பக்கமாக சிவனடி குஞ்சியப்புவுக்கு நடேசு அடிக்கிறான் என்று கூறிக் கேட்டது. அது என் மகனின் குரல் என்று அடையாளம் கண்டுகொண்டேன். நாங்கள் ஓடிப்போனோம். பின்னால் இளையதம்பி வந்தார் மகனைக் கண்டேன். எதிரி உலக்கையை வைத்துக் கொண்டு நின்றார். செல்லப்பாவும் அங்கு நின்றார். சிவனடி பாதையில் கிடந்தார். அந்த நேரத்தில் எதிரிமீது காயங்கள் எதுவுமில்லை. இரண்டு பக்கத்தினரும் பொல்லாலும் கல்லாலும் தாக்கிக்கொண்டிருந்தனர். நாகமுத்து, கணபதி, மகேந்திரன், செல்லப்பன் வெள்ளை, கதிரமலை, மகாராஜன் எதிரி ஒருபக்கத்திலும் சிவனடி, திருவடி, சிவசரணம், செராசா, கனகன் மறுபக்கத்திலும் நின்றார்கள் அவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டது."

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

# நாவலர் பெருமானின் 150-வது பிறந்ததின கொண்டாட்டம்

கொழும்பு, திங்கள் நாவலர் பெருமானின் 150வது பிறந்த தினத்தை மிகவிமரிசையாக இவ்வாண்டில் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை மேற்கொண்டு வருகிறது. அத்தினத்தை யொட்டி தேசிய அடிப்படையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடத்துவதென சபை தீர்மானித்துள்ளது. மூன்று மொழிகளிலும் நடத்தப்படும் போட்டிகளுக்கும் மொத்தம் பதினெட்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

கொழும்பு, ஞாயிறு ஜனாதிபதி பிரதம மந்திரி மற்றும் மந்திரிமார்கள் போன்றவர்களுக்கு கொழும்பு பெரியாஸ்பத்திரியில தனியாக வார்டுகள் ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது

......

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ். வளர்மதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நடப்பாண்டுக்கான மன்ற அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. வி. செல்லையா, துணைத்தலைவர்: திரு. கி. கந்தசாமி, செயலாளர்: திரு. மா. கனகரத்தினம், துணைச்செயலாளர்: திரு. ஜெயதிலகா, பொருளாளர்: திரு. இ. பரமநாயகம், துணைப்பொருளாளர்: திரு. க. தெய்வேந்திரம், காப்பாளர்: திரு. கி. செல்லப்பா


## புலோலி ஆண்கள் மகா வித்தியாலயம்

பருத்தித்துறை

11-ம் வகுப்பு கணிதப் பிரிவில் இன்னும் சில வெற்றிடங்கள் உண்டு. இப்பத்திரிகை மூலம் நான் 8-5-72-ல் வெளியிட்ட விண்ணப்ப முடிவுத் திகதி 8-6-72 வரை நீடிக்கப்பட்டுள்ளது

4228 அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தன்னை வெட்டும் கோடரியிடமும் மணக்காது தன் நறுமணத்தைத் தரும் சந்தன மரத்தைப் போன்றவன் நேர்மையான மனிதன்.

— துளசிதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

ஸ்ரீ பரிதாபி வருடம் வைகாசி மாதம் 24-ந் திகதி (6-6-72)


## மக்கள் பாடசாலைகள்

நாட்டின் பாடசாலைகள் ஆற்றவேண்டிய சமூகச் சேவைகளிலும் பாடசாலைகளின் முன்னேற்றத்தில் அக்கறை எடுக்காமலிருப்பதே இன்றைய சமூகநோய்களில் மிகவும் கொடியது. இந்த நோய்க்கு கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இரண்டு மருந்துகள் கொடுத்திருக்கிறார். நேற்றுத் தொடக்கம் இழமைக் கொடுமுறை மாணவர்களும் ஆசிரியர்களும் கூடி தேசியக் கொடியை ஏற்றி தேசிய கீதம் பாடி புதிய குடியரசின் இலட்சியத்தை விளக்கக்கூடிய நல்லுரையைக் கேட்டுப் படிப்பைத் தொடங்குவது முதலாவது; இரண்டாவதாக அகிலஇலங்கை பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்றை கொழும்பில் ஆகஸ்ட் மாதம் அங்குரார்ப்பணம் செய்வது. இதற்கு 200 ஆசிரியர்களும் 400 பெற்றோரும் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வந்து கூடுவார்கள். பாடசாலைகளை அரசாங்கம் நிர்வகித்த காலமாகிய அந்நிய ஆட்சி மறைந்து முழுச் சுதந்திரநாட்டில் மக்கள்தான் பாடசாலைகளின் உண்மையான நிர்வாகிகள் என்பதை உணர்ந்து நாட்டின் வெவ்வேறு மாதிரி வரும் பாடசாலைகளையும் மக்கள் பாடசாலைகளென்று அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது மருந்து மாணவர்களின் சுதந்திரமாகிய நாட்டுப்பற்றை சத்தியப்பண்ணக் கூடியது. தேசியகீதத்தைப் பாடி தேசியக்கொடியை வணங்குவதால் நாமெல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற சகோதரத்துவம் விருத்தியடையும். பெற்றோர் ஆசிரியர் சங்கம் அமைப்பதால் நமது பள்ளிக்கூடம் என்ற பற்று வளர்ந்து கல்வியில் முன்னேற்றம் காண முடியும். ஆயினும் இவை எல்லாம் மருந்து என்பதை மறக்கக்கூடாது. ஒழுங்கான முறையில் பாவித்தால்தான் மருந்து குணமடையும், அல்லது அந்த மருந்து நோயாளிக்கே தீங்கை விளைவிக்கும். மருந்துக்குரிய உணவு மிக அவசியம்; அது பத்தியத்துக்குக் கட்டுப்பட்டதாயிருக்க வேண்டும். ஸ்ரீலங்கா என்ற சொல்லிலே தேன்வந்து பாய வேண்டும்; இது எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே சக்தி பிறக்க வேண்டும். இல்லாவிடின் தேசியகீதம் சுவைக்காது. தேசப்பற்று வளராது. பக்தியற்ற மதகுருமார் செய்யும் பூசைபோல் முடியும். எனவே பாடசாலையின் ஆத்மிக சூழ்நிலை பாடசாலைச் சமூகத்தின் நல்லிணக்கம் முதலியன மிகவும் முக்கியமானவை. சொல்லால் வர்ணிக்கமுடியாத ஓர் இனிமையான சாதகமான சமூக அமைப்பின் அடிப்படையில்தான் இவ்விரு பரிகாரங்களும் பலனளிக்கும். பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் பிழைத்து வளரத் தொடங்கினால் பள்ளிக்கூடங்களிலுள்ள ஏற்றத்தாழ்வு நீங்கி ஒருசில மிடுக்குள்ள பாடசாலைகள் போல் நாட்டுப் புறத்தில் உயர்வற்றுப் புறக்கணிக்கப்பட்டிருக்கும் கொட்டில் கூடங்களும் தலைநிமிர உதவும்.

## மருத்துவத்தின் மோசநிலை

நாட்டில் ஏனைய துறைகளில் நிலவும் நெருக்கடிகள் மருத்துவத்துறையில் மிக மோசமாகக் காணப்படுகின்றன. தேவைக்கேற்ற வைத்தியசாலைகள் தளபாடங்கள், மருந்துகள், வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் இவையெல்லாம் இன்று மிகத்தட்டுப்பாடான நிலையிலிருக்கின்றன. சுகாதார அமைச்சின் பகீரதப்பிரயத்தனம் கூட பலிக்குமா என்ற சந்தேகம் மக்கள் மனதில் குடிகொண்டிருப்பது நியாயந்தான். இந்த இடுக்கண் எப்போது நீங்குமென்று பிரார்த்திக்கும் வேளையில் இன்னொரு இடிக்கும் தகவலும் கிடைக்கின்றது.

வைத்திய நிபுணரின் சிகிச்சை நிலையத்தில் நாட்கணக்காகத் தவமிருக்கும் நோயாளிகள் அவர்கள் குறிப்பிடும் மருந்தை வைத்தியசாலையிலோ அல்லது வெளியிலோ பெற முடியாது வருந்தும் நிலையில், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மருந்துகள் உதவாதுகிடக்கின்றனவாம். 'இ-இலில்' மருந்துச்சாலையிலும் நாட்டின் பெரிய வைத்திய சாலைகளிலும் இந்த அதிர்ச்சிகரமான அழிவு நிலை காணப்படுவதாக கணக்குத் தணிக்கை மா அதிபர் தனது 'வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். பணநஷ்டம் மட்டுமல்ல அதிகாரிகளின் அசட்டை மருந்துகள் இலாகாவின் நிர்வாக ஊழல்கள். இவையெல்லாம் வறுமையில் வாடும் நாட்டைத் தாங்க முடியாத நிலைக்குத் தள்ளிவிடுகின்றன. இதுமட்டுமல்ல, நாட்டின் சுகாதாரம் நோயாளிகளின் தலைவிதி எவ்வித அபாய நிலையில் இருக்கின்றதென்பது சொல்லாமலே விளங்கும்.

பலதீராத நோய்களில் இடர்ப்படும் மருத்துவ சுகாதார அமைச்சு விரைவில் குணமடைந்தால்தான் நாட்டின் சுகாதாரம் விருத்தியடையும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ... தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

# இலங்கை யானைக்குட்டி சீனாவுக்குப் பயணம்!

கொழும்பு, திங்கள் இலங்கை மக்களின் இனிய அன்பளிப்பாக சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய்க்கு யானைக்குட்டியொன்றை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அன்பளிப்பாக வழங்குவார்.

இருவார உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு சீனாவுக்குச் செல்லும்போது பிரதமர் இந்த யானைக்குட்டியை பரிசாக வழங்கவுள்ளார். பிரதமர் ஸ்ரீமாவோவின் சீன விஜயத்துக்கான ஏற்பாடுகள் இப்போது பூர்த்தியாகியுள்ளன. இம்மாதம் 24-ம் திகதி பிரதமர் பீக்கிங் புறப்படுவார். இவ்வாரத்தில் யானைக்குட்டி முதலில் கப்பலில் புறப்படும்.

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு சீனப் பிரதமர் அழகான ஒரு ஜோடி துருவக்கரடிக்குட்டிகளை வழங்குவார்.

சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் அமெரிக்க ஜனாதிபதி திரு. றிச்சர்ட் நிக்ஸன் சீனாவுக்கு விஜயம் செய்தபோது ஒரு ஜோடி துருவக்கரடிக்குட்டிகளை வழங்கினார்.

## திருட்டு வழக்கு

வல்வெட்டித்துறை, திங்கள் சுந்தரம் தேவசகாயம் என்பவர் சுமார் 750 ரூபா பெறுமதியான ரேடியோவை திருகு. பொன்னன் சுந்தரம் என்பவரது வீட்டில் பதுக்கி வைத்திருந்ததாக நெல்லியடி பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி பொன்னன் சுந்தரம் என்பவரை விடுதலைசெய்து சுந்தரம் தேவசகாயம் என்பவரைக் குற்றவாளியாகக் கண்டு கைவிரல் அடையாளம் எடுக்கும்படி உத்தரவிட்டுத் தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வேலணை, திங்கள் புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையம் நடத்திய 72-ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டியின்போது "செற் அப்" முறை கைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய ஊர்காவற்றுறை செல் ஜேம்ஸ் சனசமூகநிலையம் மூன்றாவது முறையாக வெற்றிக் கேடயத்தைப் பெற்று சொந்தமாக்கிக்கொண்டது. மகாமாரி சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி மின்னொளியில் நடைபெற்றது. மத்தியஸ்தராக திரு. பி. பொன்னுச்சாமி கடமையாற்றினார்.

## லண்டனில் இலங்கையின் புதிய அரசியலமைப்பை எதிர்த்து தமிழர் ஊர்வலம்

லண்டன், ஜூன் 5 கடந்த மாதம் 20-ம் திகதி இங்கிலாந்திலுள்ள இலங்கை வாழ் தமிழர்கள் யாவரும் ஹைட் பூங்காவில் கூடி இலங்கையின் புதிய அரசியல் சாசனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தோடு இலங்கைத் தூதரகத்துக்கு ஊர்வலமாகச்சென்று புதிய அரசியல் சாசனத்தை தூதரகத்தின் முன்வைத்து தீயிலிட்டனர்.

இந்த ஊர்வலத்தில் இந்திய, மலேஷியத் தமிழர்களும் கலந்துகொண்டனர். 'தமிழர்க்கு உரிமைவேண்டும் சிங்களம் ஒழியவேண்டும்', புதிய 'அரசியல் திட்டத்தில் தமிழர்க்கு உரிமையில்லை' 'தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்' என்பன போன்ற பல வசனங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு இவர்கள் சென்றனர்.

ஊர்வலத்தின் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பலர் புதிய அரசியல் சாசனத்தை எதிர்த்து உரையாற்றினர். இதன் பின்னர் லண்டன் இலங்கைத் தமிழர் விடுதலை முன்னணி இயக்கம் இங்கிலாந்துப் பிரதமரிடம் ஒரு மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தது.

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'தமிழர்களின் குறைந்தபட்ச உரிமைகள் கூட பூரணமாகப் பறிக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் பிரதேசமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிற மக்கள் குடியேற்றப்படுகிறார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தினால் சிங்களமொழி தமிழ் மக்கள் மேல் திணிக்கப்படுகிறது' முப்படைகளிலும் தமிழர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் மலைநாட்டுத் தமிழர்கள் இந்த புதிய அரசியல் திட்டத்தினால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

## அடுத்த வருடத்தில் முதல் வகுப்புக்கு 35,000 பேர்!

கொழும்பு, திங்கள் ஆறு வயதுச் சிறுவர்களை முதல் வகுப்பில் அடுத்த வருடம் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு செய்துவருகிறது. 350,000 சிறுவர்கள் அடுத்த வருடம் சேர்க்கப்படுவார்கள் என்று நடவடிக்கைகளுக்கு பாடசாலை அனுமதிகளுக்குப் பொறுப்பான கல்விப்பகுதி டைரக்டர் திரு. வி. வீரவர்த்தன தெரிவித்தார்.

திறமான பாடசாலைகளில் தமது குழந்தைகளை அனுமதிப்பதற்கு பெற்றோர்கள் முயற்சி எடுக்கவேண்டுமென்றும், தமது இல்லங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் அனுமதிக்க வேண்டுமென்றும், கல்வி அமைச்சு வேண்டுகோள் விடுக்கிறது.

முதல் வகுப்புக்கான விண்ணப்பங்களை ஆகஸ்ட் மாதத்திலிருந்து கல்வி அமைச்சு ஏற்றுக்கொள்ளும்.

## புதிய அரசியலமைப்பில் அதிக நன்மை உண்டாம்

யாழ்ப்பாணம், செவ் 'குடியரசு தினத்திற்கு முன்பு தமிழருக்கு இந்நாட்டிலிருந்த உரிமைகளைவிட இப்போது புதிய அரசியல் திட்டம் மூலம் கூடிய உரிமைகள் கிடைத்துள்ளது' என்று சாவகச்சேரி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் பாரிஸ்டர் எம். சிவானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பாரிஸ்டர் சிவானந்தன் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

புதிய அரசியல் திட்டம் வருமுன்னர் இந்நாட்டின் சட்டங்கள் எதுவும் தமிழில் இடம்பெறவில்லை. புதிய அரசியல் திட்டத்தின் படி இந்நாட்டில் தற்போதுள்ள சட்டங்களும் இனிமேல் வரப்போகும் சட்டங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படவிருக்கிறது. இந்நாட்டின் சரித்திரத்தில் முதற்தடவையாக தமிழ் மக்கள் இந்நாட்டின் சட்டங்களை தமிழில் படித்துவிளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் திட்டத்தின் பிரிவு 9 [2] 10 [1] இதற்கு இடமளிக்கிறது.

புதிய அரசியல் திட்டத்தில் தமிழும் இந்நாட்டின் நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய சட்டத்தின் 11-ம் பிரிவு [3] படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழும் நீதிமன்ற மொழியாக இருக்கும்.

புதிய அரசியல் திட்டத்தின் பிரிவு 11 [3]-ன் மூலம் எந்த நீதிமன்றத்திலும் வழக்கறிஞர்கள் விசாரணையை தமிழில் நடத்தலாம்.

புதிய அரசியல் திட்டத்தின் 6-ம் பகுதியில் குறிப்பாக 18-ம் பிரிவு (ஏ)-ல் எந்த நியமனங்களிலும் பாகுபாடு காட்டப்படாதென்றும் நியமனங்களில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.


## திருமணம்

மணமகன்: கோண்டாவில் திரு. நா. குணரத்தினம் மகன் பரமேஸ்வரன் (பொறியியலாளர் லண்டன்)

மணமகள்: மானிப்பாய் திரு. ச. வேதநாயகம் மகள் ஞானவல்லி.

இடம்: வண்ணார்பண்ணை சிவன்கோயில்.

முகூர்த்தம்: முற்பகல் பத்துமணி — நண்பகல் 12 மணி.

மணமக்கள் பெற்றோர் - உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றனர்.

தனியழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

நா. குணரத்தினம்
கோண்டாவில்.

ச. வேதநாயகம்
'அமிர்தம்'
மானிப்பாய்.

4225


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org